# சங்க இலக்கியம் பகிரும் கூத்துக்கலை

**முனைவர் வே. வளர்மதி**
**உதவிப்பேராசிரியர்,**
**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),**
**ஈரோடு-638051. mathiponnu@gmail.com**

61

**ஆய்வுச்சுருக்கம்**

பன்னெடுங்காலத்திற்கு முன் வாழ்ந்து வந்த மனிதன் பொழுதுபோக்கிற்காகவும், விளையாட்டிற்காகவும், அறிவு சார்ந்த காரணங்களுக்காகவும், தன்னைக் கலையின் மீது ஈடுபடுத்திக் கொண்டிருக்க வேண்டும். காலையில் எழுந்து வயலுக்குச் சென்று வேலை செய்து மாலை வீடு திரும்பும் உழவனுக்கு உடல் அசதியோடு மனச்சுமையும் கூடியிருக்க வேண்டும். அவன் சந்தோசத்தில் இருக்க வேண்டிப் பாடல்களைப் பாடியும் கைகளைத் தட்டியும் இசையை எழுப்பி இருக்க வேண்டும். அல்லது பொருட்களைத் தட்டியோ உரசியோ ஒலி எழுப்பி இருக்க வேண்டும். அதனோடு நடனம் ஆடித் தான் மட்டும் மகிழ்ச்சி அடையாமல் தன்னைப் போன்ற பிற மக்களையும் மகிழ்ச்சி அடைய வைத்திருக்க வேண்டும். அந்த வகையில் இசையோடு கூடிய நடிப்புக்கலை கூத்துக்கலையாக வளர்ந்தது.

மக்களை இன்புறச் செய்யும் நிகழ்ச்சி கூத்து ஆகும். இக்கலையில் மக்கள், மன்னர்கள், புலவர்கள் என்று அனைவரும் பங்கு பெற்றனர். விறலியர், வயிறியர், கோடியர், கண்ணுளர், ஆரியர் எனக் கூத்தர்களை இலக்கியங்கள் சுட்டுகின்றன. இவ்வகை கூத்துக்கலைப் பற்றி இக்கட்டுரையின்கண் ஆராயப்படுகிறது.

**திறவுச்சொற்கள்**

ஆடல், கூத்து, கூத்தர், பாணர், பொருநர், விறலியர்

**முன்னுரை**

இலக்கியம் ஒரு கலை. கலையென்றால், சொல்லுகிற அல்லது சொல்ல விரும்புகிற செய்திகளை அழகும் நேர்த்தியும் படச்சொல்வது; காண்பார், கேட்பார் அல்லது படிப்பார் மனதில் சுவைபடவும், அவர்கள் மனம் கொள்ளுமாறும், அவர்கள் சிந்தையில் அல்லது உணர்வில் ஓரளவாவது அசைவையும் தாக்கத்தையும் ஏற்படுத்துமாறும் அமைவது; மேலும் மேலும் காணுமாறும் கேட்டுமாறும் படிக்குமாறும் ஓர் ஆர்வத்தைத் தூண்டுவது படைப்பாற்றல் பண்பு. கலைகளின் அடிப்படைப் பண்பும் அதுவே ஆகும்.

நிகழ்த்துக் கலை

நிகழ்த்துக் கலை என்பது பார்வையாளர் மத்தியில் நிகழ்த்திக் காட்டப்படும் கலையாகும். ஆடல், கூத்து (நாடகம்) ஆகியவை முக்கியமான நிகழ்த்துக் கலைகளாகும். இசையும் இவ்வாறு நிகழ்த்தப்படுகிற கலையேயாகும்.

**கூத்து அல்லது நாடகம்**

முத்தமிழிழுள் கூத்து என்பதும் ஒன்று. இது ஆடல் என்றும் சொல்லப்படும். ஆடல் தனியாளாகவும் அல்லது குழுவாகவும் நிகழ்த்தப்படுவது. அதற்குக் கதை என்பது அவசியமில்லை.

கூத்து என்பது நாடகம் என்று பின்னர் சொல்லப்பட்டது. இது குழுவாக ஒப்பனை, நடிப்பு முதலியவற்றுடனும் கதை நிகழ்ச்சிகளுடனும் நிகழ்த்தப்படுவது.

**கூத்தர் ஆடுகளம்**

**"புய்த்தெறி கரும்பின் விடுகளைத் தாமரைப்**
**பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்**
**ஆடுகளம் கடுக்கும் … " (புறம். 28: 12-14)**

கரும்பின் தளிர்கள் பிய்த்து எறியப்படுகின்றன. அவை தாமரை மொட்டுகள் மேல் விழுகின்றன. தாமரை மொட்டுகள் சிதைகின்றன. இது ஒரு சாதாரண நிகழ்வு. இதற்குக் கூத்தர் ஆடுகளம் உவமையாகக் கூறப்படுகிறது. ஒரு சாதாரண நிகழ்வு 'உவமை அணியால்' அழகு பெறுகிறது. கூத்தர் ஆடுகளம் நேரடியாகக் காட்சிப்படுத்தப்படவும் இல்லை; விளக்கம் பெறவும் இல்லை. இங்கு கவனத்தைப் பெறுவது 'கூத்தர் ஆடுகளம்'.

**கூத்தாட்டவை**

**"கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று" (திருக்குறள் 332)**

கூத்தாட்டு அவைக் கூட்டம் போன்றது பெரும் செல்வம். போவதும் அது கலைதல் போன்றது. கூத்தாட்டத்தில் கூட்டம் கூடுவது போலச் செல்வம் சேர்கிறது. கூத்தாட்டம் முடிந்து கூட்டம் கலைவது போலச் செல்வம் குறைகிறது. பெரும் செல்வம் சேர்வதற்கும் அது அழிவதற்கும் 'கூத்தாட்டவைக் குழாம்' எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது. இதைத் திருவள்ளுவர் அவையில் அமர்ந்து கூத்துப் பார்த்த கதையாகக் கூறலாம். இங்கு கவனத்தைப் பெறுவது 'கூத்தாட்டவை'.

**கூத்தர் வகைப்பாடு**

சங்க இலக்கியங்களில் உள்ள தரவுகளைக் கூட்டிப் பார்க்கும் போது எங்கும் சொல்லாலும் பொருளாலும், கூத்தும் கூத்தரும் நேரடியாக விளக்கம் பெறவில்லை. ஆனால், 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்' எனத் தொல்காப்பியம் புறத்திணையியலில் கூத்தர் முதன்மைப்படுத்தப்படுகின்றனர்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும் " (30: 3-6)**

புரவலரிடம் சென்று பெற்ற வளத்தால் தோற்றப் பொலிவுடன் உள்ளவர் வறுமையில் வாடுபவர்களை வழியில் கண்டு புரவலரிடம் சென்று பயன் பெற வழி கூறுவது இப்பகுதி. இங்கு தொல்காப்பிய காலத்தில் கூத்தர் என்ற பிரிவு வேறாகப் பேசப்பட்டுள்ளது என்பது கவனத்திற்குரியது. எல்லோரையும் கூத்தர் எனப் பொதுவாகக் கூறாது; பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் வேறாக வகுக்கப்படுகின்றனர். அவர்கள் செய்யும் வேறுபட்ட கலைத்தொழிலால் அவர்கள் சார்ந்த குழுப் பெயர்கள் வேறுபடுகின்றன எனக் கொள்ளலாம்.

**காதலும் கூத்தும்**

காதலர்கள் சந்தித்துக்கொள்ளவும், குறியிடம் குறிப்பிடுவதற்கும், தங்களின் மகிழ்ச்சியினை வெளிப்படுத்துவதற்கும் இக்கூத்துக்கலை களமாக விளங்கியுள்ளது. கலித்தொகையில்,

**"தொழீஇ ஒருக்கு நாம் ஆடும் குரவையுள் நம்மை**

**அரக்கினான் போல் நோக்கி அல்லல் நோய் செய்தல்" (கலி.104:69-70)**

என்று மகளிர் குரவைக் கூத்து நிகழ்த்தியதைக் காணமுடிகிறது. இவ்வகைக் கூத்தில் தலைவி தோழியோடு ஆடியதையும், அப்போது தலைவன் தலைவியைக் காண வருவதையும், அவர்களிடையே காதல் மலர்வதையும் பாடலாசிரியர் சுட்டுகிறார். ஆட்டனத்தியை எதிர்பார்த்த ஆதிமந்தி இத்துணங்கைக் கூத்தில் இருப்பானோ என்று சுற்றிப் பார்த்ததாகக் குறுந்தொகை குறிப்பிடுகிறது.

தலைவன் காதிற் குழையும் கழுத்தில் மாலையும் அணிந்து குறுகிய பல வளையல்களையும் அணிந்தவனாய் விழாக்காலத்தில் தலைவியோடு துணங்கை ஆடியதாகப் பின்வரும் நற்றிணைப்பாடல் எடுத்துரைக்கிறது.

**"குழையன் கோதையன் குறும் பைந்தொடியன்**

**விழவு அயர் துணங்கை தழூஉகம் செல்ல" (நற்.50:2-3)**

என்னும் அடிகள் மேற்கூறிய செய்தியினை உரைப்பதைக் காணலாம். "மதுரைத் தமிழ்க் கூத்தனார் தமிழரின் கூத்துக்களை ஆடிக்காட்டுவதில் புகழ்பெற்றிருந்தார்" என்று வரலாற்றாசிரியர் கே.கே. பிள்ளை குறிப்பிடுவது இங்கு சிந்தித்தற்குரியது.

**புறமும் கூத்துக்கலையும்**

போர்க்காலங்களில் வீரர்களை ஊக்கப்படுத்தவும், எழுச்சியூட்டவும் பழங்காலத்தில் கூத்துகள் நடத்தப்பட்டன. இதனை அகநானூற்றின் 22ஆம் பாடல் உறுதி செய்கிறது. கூத்து வகைகளில் முன்தேர்க்குரவை, பின்தேர்க் குரவை என இரண்டு வகைக் கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டன. இவ்வகைக் கூத்துக்களைப் பற்றி தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்களும் இயம்புகின்றன. பதிற்றுப்பத்தில்,

**"குருதி பனிற்றும் புலவுகளத் தோனே**

**துணைவகை ஆடிய வலம்படு கோமான்" (பதிற்று.57:3-5)**

மேற்கண்ட அடிகள் துணங்கைக் கூத்து போர்க்காலங்களில் நிகழ்த்தப்பட்டதை உறுதிசெய்கின்றன.

குரவைக் கூத்து

"பண்டைய சமுதாயத்தில் விளங்கிய பொழுதுபோக்கு விளையாட்டுக்களுள் ஒன்று குரவைக்கூத்து. குரவைக் கூத்தினை 'மலை நடனம்' என்று அபிதான சிந்தாமணி குறிக்கின்றது. ஏழு அல்லது ஒன்பது மகளிர் கூடி ஆடும் ஆட்டம் என்று உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர். குரவையில் பங்கு கொள்வோர் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்ளுதல் குரவைக் கூத்தின் தலையாய நெறிமுறையாகும்" என்று பாக்யமேரி குறிப்பிடுவது குரவைக் கூத்தின் நிகழ்த்துமுறையை விளக்கியுரைக்கிறது. எனவே இக்கூத்தினைப் பெண்கள் மட்டும் ஆடியிருக்க வாய்ப்பில்லை. ஆண்களும் பெண்களும் கலந்து ஆடியிருக்க வேண்டும். இவ்வகையான குரவைக் கூத்து ஆடுவதால் தலைவன் தலைவியின் நெருக்கம் அதிகமாக்கப்படுவதற்கான சூழல் உருவாவதை உணரலாம்.

குரவைக் கூத்து சில நேரங்களில் குடும்பங்களில் குழப்பம் தோன்றுவதற்கும்

வழிகோலியது. கலித்தொகையின் 65ஆம் பாடலும், பரத்தையோடு தலைவன் குரவை ஆடுவதால் அதனைக் கண்ட தலைவி வருத்தமுறுவது பாடலடிகளில் சுட்டப்படுகின்றன. இச்செய்தியினைக் கலித்தொகையின் 66ஆம் பாடலும், நற்றிணையின் 50ஆவது பாடலும் மதுரைக்காஞ்சியின் 328ஆம் அடியும் எடுத்துரைக்கக் காணலாம். அகநானூற்றில் இக்குரவைக் கூத்து, கீழ்க்காற்றுக் கொண்டு வந்து குவித்த மணலில் குரவைக் கூத்து நிகழ்த்தப்பட்டது எனக் கூறுகிறது.

**“குரவை தழீஇ யாம் மரபுளி பாடி**

**தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்” (கலி.103:75-76)**

என்னும் கலித்தொகை அடிகளில் குரவைக் கூத்தில் ஏற்றினை அடக்கிய தலைவனும் கலந்துகொண்டு சுற்றத்தார் மகிழும்படி ஆடியதை அறியமுடிகிறது.

**துணங்கைக் கூத்து**

துணங்கைக் கூத்து போர்ச்செய்திகளை எடுத்துரைக்கப் பயன்பட்டது. இதில் மகளிர் மட்டுமே பங்குகொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்ததைக் காணமுடிகிறது. பரத்தையர்கள் பாடும் துணங்கைக் கூத்து எனக் கலித்தொகையும் (70), பெண் வேடமிட்டு பெண்களுடன் சேர்ந்து ஆடுகின்றான் தலைவன் என்றும், பிறகு துணங்கைக் கூத்து ஆடியவுடன் ஆண் எனத் தெரிந்ததும் தலைவனின் ஆடை கிழிந்து போனதாகவும் கலித்தொகையின் 73ஆம் பாடல் எடுத்துரைக்கிறது. இரவு நேரத்தில் துணங்கைக் கூத்து நிகழ்த்தியதாகப் பதிற்றுப்பத்து (52) குறிப்பிடுகிறது.

வெறியாட்டு

கூத்து வகைகளில் ஒன்றான வெறியாட்டு என்பது பெண்களுக்காக நிகழ்த்தப்படுவதாக இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. பெண்களுக்குப் பேய் பிடித்து விட்டதாக நற்றாய் நினைத்துக்கொண்டு வேலனை அழைத்து வெறியாட்டு நடத்தினர். தலைவனுடன் பேசாமலும், பார்க்காமலும் இருக்கும் தலைவி உண்ணாமல் உடல் மெலிந்து காணப்படுகின்றாள். எப்பொருளைப் பார்த்தாலும் தலைவனின் முகமே தெரிகின்றது. இவ்வாறு காதல் நோயால் வாடும் தலைவியின் நிலை தவறாக நற்றாயினாலும் செவிலியினாலும் புரிந்துகொள்ளப்பட்டு இது பேய் பிடித்ததின் விளைவு என்று எண்ணி வெறியாட்டிற்கு ஏற்பாடு செய்கின்றனர்.

**“கிழவோன் அறியா அறிவினள் இவளென**

**மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்” (தொல்.பொருள்.களவு.நூ.27)**

என்னும் தொல்காப்பிய நூற்பாவானது, நம் குலத்திற்கு ஒத்த தலைவனை அறிந்து நட்பு கொள்ளத் தெரியாத அறிவினையுடையாள் என நற்றாயும் செவிலியும் எண்ணிக் குற்றமற்ற சான்றோரிடத்துக் கூறுகின்றனர் என்று உரைப்பதைக் காணலாம்.

**“மறிக் குரல் அறுத்து தினைப் பிரப்பு இரீஇ**

**செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் இறங்க**

**தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா” (குறும்.263:1-3)**

என்ற பாடலின் வழி வெறியாட்டானது, களவொழுக்கத்தில் உடன்பட்டு நிற்கும் தலைவியின் நிலையை அறியாத நற்றாய் வெறியாட்டு நிகழ்ச்சி நடத்தத் தயாராகின்றாள். வெள்ளாட்டின் குட்டியினது கழுத்தை அறுத்து, தினை அரிசி நிரம்பிய பிரம்பின் கூடையை வைத்து, ஆற்றின் நடுவே

அமைந்த மணல் திட்டில், பல இசைக்கருவிகள் ஒலிக்க, வேலன் முதலியோரை ஆவேசித்துப் பல தெய்வங்களை வேண்டுவார்கள் என்று உரைக்கின்றது.

பாவை ஒன்றில் பொறி இணைத்துவிட்டால் அது எவ்வாறு தானே இயங்கி ஆடுமோ அவ்வாறு வெறியாட்டு ஆடினார்கள் என்று அகநானூறு (98) கூறுகின்றது. திருமுருகாற்றுப்படையில் தெய்வம் ஏறப்பட்டு வெறியாட்டு ஆடப்படுவதையும் (273), இவ்வெறியாட்டு ஒரு விழாவிற்கு ஒப்பாகக் கருதப்பட்டதையும் அறியலாம்.

**“பொய்மணல் வரைப்பில் கழங்கு படுத்து அன்னைக்கு**

**முருகு என மொழியும் வேலன் மற்று – அவன்” ( ஐங்குறு.249:1-2)**

புதிதாகக் கொண்டுவரப்பட்ட மணலைப் பரப்பி அதன் மேல் வெறியாட்டுக் களம் அமைக்கப்பட்டதையும் அன்னையால் வரவழைக்கப்பட்ட வேலன் மணலின் மீது கழற்சிக்காய்களைப் பரப்பிய பின் குறிபார்த்துத் தலைவியின் மெலிவிற்குக் காரணம் உரைப்பான் என்னும் செய்தி இடம்பெறுகிறது. இதன்வழி வெறியாட்டு ஒரு பேயோட்டும் சடங்காக நிகழ்த்தப்பட்டதை அறியலாம்.

**“முதுவாய் பெண்டிர் அது வாய் கூற**

**களம் நன்கு இழைத்து கண்ணி சூட்டி**

**வளநகர் சிலம்பப் பாடி பலி கொடுத்து**

**உருவச் செந்திணை குருதியொடு தூஉய்**

**முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள்” (அகம்.22:7-11)**

என்ற அடிகளில் முருகவேளை வழிபடுவதற்கு வேலனை வெறியாட்டு நிகழ்த்த நற்றாய் அழைத்தமை புலப்படுகின்றது. வெறியாட்டு குறித்த செய்திகள் சங்க இலக்கியத்தில் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றன. நற்றிணையில் 268, அகநானூற்றில் 370, ஐங்குறுநூற்றில் 245, 248, குறுந்தொகையில் 53, 360ஆம் பாடல் ஆகியவை வெறியாட்டு நிகழ்த்தப்படும் சூழலை மிக விரிவாகப் பேசுகின்றன. வெறியாட்டு நிகழ்த்தப்படுவது பெரும்பாலும் நோய்த்தீர்த்தற் பொருட்டு மட்டுமே நிகழ்த்தப்பட்டுள்ளதை இதன்வழி அறியமுடிகிறது.

**உவகைக்கூத்து**

ஒரு தாய் தன் குழந்தைக்கு உணவு ஊட்டுகிறாள். உண்ணாமல் அடம்பிடிக்கும் குழந்தையைச் சிறிது கோபித்துக் கொள்கிறாள். கோபித்தவர்களை குழந்தை மகிழ்ச்சியால் கூத்தாடவைக்கிறது (கலித்தொகை 85).

**செருக்குறித் தாரை உவகைக்கூத் தாட்டும் (கலி 85: 34)**

செருக்குறித்தாரை – கோபித்தவர்களை உவகைக் கூத்தாட்டும் – மகிழ்ச்சிக் கூத்தாட்டும். குழந்தைக்கு தாய் உணவூட்டும் பெரும்பாடு ‘உவகைக்கூத்தாட்டு’ என உருவகப்படுத்திக் கூறப்படுகிறது. மருதக்கலி ஆசிரியர் மருதனிளநாகனார் ‘உவகைக்கூத்து‘ என ஒரு சொல்லாக்கத்தை அறிமுகம் செய்கிறார். ‘உவகைக்கூத்து’ விளக்கத்தை வேண்டிநிற்கும் நாடகக் கலைச்சொல். ‘கொமெடி’ என்ற ஆங்கில நாடகக் கலைச் சொல்லுடன் ஒப்பு நோக்கலாம்.

**கருங்கூத்து**

கலித்தொகையில் (65) ஒரு வேடிக்கை நிகழ்ச்சி கூறப்படுகிறது: ஓர் இளம் பெண் தன்

காதலனைக் காண இரவு நேரத்தில் குறித்த இடத்தில் தனிமையில் நிற்கிறாள். அங்கே ஒரு 'முதுபார்ப்பான்' வருகிறான்; அவள் தனிமையில் நிற்பதைக் காண்கிறான்; அவளைக் காம எண்ணத்துடன் சீண்டுகிறான்; அவளைப் பெண் பிசாசாகவும் தன்னை ஆண்பிசாசாகவும் கூறி அவளை அணுகுகிறான்; அவள் 'எஞ்சாது ஒருகை மணற்கொண்டு மேல் தூவ'; அவளை உண்மையில் பிசாசு என நினைத்து அலறுகிறான். பாத்திரங்களின் விவரிப்புடன் நிகழ்ச்சி விரிவாகக் கூறுப்படுகிறது. இந்த நிகழ்வைப் பெருங்கருங்கூத்து (கலி 65: 29) என உருவகப்படுத்துவது இங்கு கவனத்தைப் பெறுகிறது. இது கூத்தராடியதற்கு நேரடி விளக்கம் அல்ல. ஒரு வேடிக்கை நிகழ்வின் விவரம். கபிலர் குறிஞ்சிக்கலியில் 'கருங்கூத்து' என ஒரு நாடகக் கலைச் சொல்லாக்கத்தை அறிமுகம் செய்கிறார். 'கருங்கூத்து' என்ற நாடகக் கலைச் சொல்லை 'ஃபார்ஸ்' என்ற ஆங்கில நாடகக் கலைச் சொல்லுடன் ஒப்பு நோக்கலாம்.

வள்ளிக்கூத்து

பண்டைய மக்கள் ஆடிய ஆடல்களில் வள்ளிக்கூத்தும் ஒன்று. நாட்டுக்கு வளமும், வெற்றியும் பெற்றுத்தந்த வள்ளிக்கொடியின் பெருமையைப்பாடி ஆடுவது ஆகும்.

**"வாடா வள்ளியின் வளம்பல தருஉம்**
**நாடுபல கழிந்த பின்றை" (பெரும்.பாண்.370- 371)**

என்ற பாடல்வரிகள் இக்கூத்துப் பற்றி விளக்குகின்றன. இக்கூத்தினை ஆடவரும் பெண்டிரும் ஆடுவர்.

**துணங்கை ஆட்டம்**

துணங்கை என்பது மற்றொரு வகைக் கூத்தாகும். பண்டைய மக்கள் விழாக்களின் போது துணங்கை ஆடினர். இதனை,

**"விழவு நின்ற வியன் மறுகில் துணங்கை" (மதுரைக்காஞ்சி 327 – 329)**

என்ற பாடல் அடிகள் உறுதிப்படுத்துகின்றன. துணங்கைக் கூத்தில் ஆண்கள், பெண்கள் எனக் குடிமக்களும் அரசரும் கலந்து கொண்டனர்.

**துடிக்கூத்து**

வெட்சித்திணையில் இடம்பெறும் கூத்துகளில் துடிநிலையும் ஒன்றாகும்.

**"மறங்கடை கூட்டிய துடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அகத்திணைப்புறனே" (தொல்.பொருள்.புறத்.4)**

தங்களின் விருப்ப தெய்வமாகிய குலதெய்வத்தை வணங்கித் தாங்கள் நிகழ்த்தவிருக்கும் போரினை வெற்றிமுகமாகச் செய்யுமாறு வேண்டுதல் நிகழ்த்துவர். போர் மறவர்கள் துடி என்னும் இரு முகப்பறையை முழக்கிக் கொற்றவையை வணங்குதலே துடிநிலை எனப்படும். போர்க்காலங்களில் போருக்கு முன் வெற்றி பெறவேண்டும் என்று கொற்றவையை வணங்கித் துடியை இயக்கிக்கொண்டு ஆடியதால் இக்கூத்து எனப்பெயர் பெற்றது. மிகுந்த வெறியுடன் ஆடப்பட்டதாக இருந்திருக்க வேண்டும். துடிக்கூத்து போர் மறவர்களால் மட்டுமின்றி முருகனாலும் ஆடப்பட்டுள்ளதாகப் பத்துப்பாட்டு பதிவு செய்துள்ளது. முருகன் திருச்சீரலைவாய்க் கடலில் சூரபதுமனை அழித்ததான். அவனது ஆறு முகங்களில் ஐந்தாவது முகம் இச்செயலைச் செய்துள்ளது என்பதைச்

**"செறுநர்த் தேயத்துச் செல்லும் முருக்கி**

ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

**கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே ஒருமுகம்” (திரு.99-100)**

என்னும் திருமுருகாற்றுப்படை அடிகள் கூறுகின்றன. கடலில் மரமாக நின்ற சூரபதுமனை அழிக்க அன்னை பார்வதியிடம் வேல் வாங்கிச் சென்றவன். கெட்டவனை அழிக்கக் கொற்றவையிடம் வேலை வாங்கிச் சென்றான். போரில் எதிர்க்கும் எதிரிகளை வேலால் குத்தி வீசித் துடியடித்து அவன் அன்னை கொற்றவையைப் பரவினான். திருப்பரங்குன்றத்து இயல்புகளைப் பேசும் பரிபாடலில்,

**”துடியின் அடி பெயர்த்து தோளசைத்து தூக்கி**

**அடுநறா மகிழ்தடப ஆடுவான் தகைமையின்” (பரி.21)**

என்னும் அடிகள் முருகன் ஆடிய துடிக் கூத்தையே குறிப்பதாகப் ‘பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்’ என்னும் நூலில் காணலாம்.

**ஆயர் குரவை**

ஏறு தழுவிய பின் ஆண்களும் பெண்களும் குரவை ஆடியுள்ளனர். குரவை ஆடும்போது முதலாமவர் வென்றவனையும் அவனது காதலியையும் பாடும்படி கூறுகிறார். பெண்கள்இ மரபு வழியான பாடல் பாடியதாக, “குரவை தழீஇய மரபுளி பாடி” (கலி: 103) என்ற வரி உணர்த்துகின்றது. அதாவது, “யாஞ்சுற்றத்தார் கூறும் முறைமையைப் பாடிக் குரவைக் கூத்தாடி” என்பதாகும். இது கூத்து நிலைப்பட்ட ஆடலாம். சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை நிகழ்த்தப்பட்டமையைக் கூறுகிறது.

**நகைக்கூத்து**

விதூடக் கூத்து என்றும் இசைபட ஆடும் போது வென்றிக் கூத்து என்றும் கூறுவர். இகழ்ச்சி பொருந்தவேனும் புகழ்ச்சி பொருந்த வேனும் விதூஷகன் சபையின் கண் நகைச்சுவை தோன்ற ஆடுவது - (157).

**வாடாவள்ளி**

வாடாவள்ளி என்பது ஆடலை உள்ளடக்கிய வளமைச் சடங்கு என்று கூறப்படுகிறது.

**“வாடாவள்ளியின் வளம்பல தரூஉம்**

**நாடுபல கழிந்த பின்னை”**

என்று இளந்திரையனிடம் ஒரு பொருணனை ஆற்றுப்படுத்தும்போது உருத்திரக்கண்ணனார் கூறுகிறார். இதற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் இருபாலரும் ஆடிய ஆடல் என்றும் இதை இழிந்தோர் காண்பர் என்றும் கூறுகிறார். தொல்காப்பிய புறத்திணையியலில் எல்லா நிலங்களுக்கும் பொதுவான புறத்துறைகள் ஒன்றாகக் கூறப்படுகிறது. உரை வகுக்கும் இளம்பூரணர் இதைக் கூத்து என்கிறார். நச்சினார்க்கினியர்,

**“மண்டமரட்ட மறவர் குழாத்திடைக்**

**கண்ட முருகனும் கண்களித்தான் - பண்டே**

**குறமகள் வள்ளி தன் கோலம் கொண்டாடப்**

**பிறகே ணோற்றாள் பெரிது”**

எனும் பாடலை எடுத்துக்காட்டுகிறார். இதன் வழி முருகன் - வள்ளி திருமணத்தைத் திரும்ப நிகழ்த்தி யதாகக் கொள்ள முடிகிறது. இக்கூத்தை இழிந்தோர் காண்பதாகக் கூறுகிறார். இதில் பாலியல் சார்ந்த உரையாடல்கள் இருந்திருக்கலாம் என ஊகிக்க வாய்ப்புள்ளது.

**அல்லிப்பாவை**

அல்லிப்பாவை என்பது ஆண் பெண்ணின் கோலத்தோடு ஆடும் கூத்தெனலாம்.

சோழன் நலங்கிள்ளியின் போர்முனையாகிய இழுக்கை கைவல்லோனால் புனைந்து செய்யப்பட்ட அழகு பொருந்திய அல்லிப்பாவை என்னும் கூத்தாடும் அழகையொப்பதென,

**"செம்மற்று அம்மநின் வெம்முனை இழுக்கை**
**வல்லோன் தைஇய வரிவனப்பு உற்ற**
**அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப" (புறம்-33: 15-18)** என்கிறது.

**வயிரியர்**

இவர்களும் ஒருவகை ஆடல் மாக்கள், பண் அமைந்த நரம்புடைய தோலாற் போர்க்கப்பட்ட யாழையும், மார்ச்சனை நிறைந்த முழவினையுடைய வயிரியர் என புறநானூறு,

**"பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்**
**மண்ணமை முழவின் வயிரியர்" (புறம்-164: 12)** பகர்கிறது.

**கோடியர்**

இவர்களும் ஒருவகை கூத்தராவார். இவர்கள் வெவ்வேறு கோலம் பூண்டு ஆடும் பான்மையினர். இவ்வுலகத்தின் நிலையாமையினை கோடியரின் வெவ்வேறு கோலம் முறையாகத் தோன்றி மறைவதை உவமையாக கூறுகிறார்.

**"ஊழியிற் றக நின் செய்கை விழவிள்**
**கோடியர் நீர்மை போல முறைமுறை**
**ஆடுநர் கழியுமிவ் வுலகத்து கூடிய" (புறம்-29: 22-24)**

கூத்தர் ஆடுகளத்தை, **"கூத்தர் ஆடுகளம் கடுக்கும்" (புறம்-28: 13-14)** என்று குறிப்பிடுகிறது. இதற்கு கண்ணுளர் குடிஞைப்பள்ளி என்ற பெயரும் இருந்திருக்கின்றது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் கூத்தும் கூத்தரும் எடுத்துக்காட்டாகச் சில இடங்களில் கூறப்பட்டபோதும் கூத்து, கூத்தர் ஆகிய சொற்களுக்கு நேரடியான தெளிவான விளக்கம் இல்லை. சங்க காலத்திற்கும் சங்கமருவிய காலத்திற்கும் இடையில் கூத்துக்கும் கூத்தருக்கும் ஏற்பட்ட வரலாற்று மாற்றங்களை இலக்கியங்களுக்கு ஊடாகவும், தொல்பொருள் ஆய்வுகளுக்கு ஊடாகவும் அறிந்து கொள்ளலாம். எவை நின்று நிலைத்தன, எவை மாற்றமடைந்தன, எவை மறைந்து போயின என்பது வரவாற்றுத் தேடல். வரலாற்றுத் தேடல் இங்கு மேற்கொள்ப்படவில்லை. இத்தேடல் சங்க இலக்கியங்களுக்குள் மட்டுப்பட்டுள்ளது. ஆகவே அந்த எல்லைக்குள் நின்று சில விளக்கங்களைக் கொண்டுகூட்டிப் பெறலாம். சங்க இலக்கியங்களில் கூத்து, கூத்தர் பற்றி விரிவான விளக்கம் இல்லாவிட்டாலும், பொதுவாகக் கூத்தும் கூத்தரும் சங்கப் புலவர் மனங்களில் வலுவாக இடம்பிடித்துள்ளதை ஏலவே தந்துள்ள எடுத்துக்காட்டுகள் ஊடாக உய்த்து உணரலாம். கூத்து மிகவும் விரிந்து பரந்து உயர்ந்த நிலையில் இருந்தது என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

**பார்வை நூல்கள்**

இராமசுவாமி மு., தமிழ்ச் சமூகத்தில் கூத்து- நாடகம் ஒரு தொடர் விவாதத்தை நோக்கி, செம்பி படைப்பகம், மதுரை. 2008.

சிவத்தம்பி கா., பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், சென்னை. 2004.

சூரியநாராயண சாஸ்திரி வி.கோ., நாடகவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2004.

ராஜ்கௌதமன், பதிற்றுப்பத்து - ஐங்குறுநூறு - சில அவதானிப்புகள், விடியல் பதிப்பகம், கோவை 2011.

ராஜ்கௌதமன், கலித்தொகை - பரிபாடல் ஒரு விளிம்பு நிலை நோக்கு, விடியல் பதிப்பகம், கோவை 2011.